இல. 1 ]

# பாராளுமன்றம்

## அலுவல் ஒழுங்கு

### 2009, மே 19, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.40 மணிக்கு

[ஆறாவது பாராளுமன்றம் (நான்காவது கூட்டத்தொடர் ) - முதலாவது கூட்டம்]

மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களால் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கேதுவாக இத்தின நிகழ்ச்சிகள் மு.ப. 9.40 மணிக்கு உறுப்பினர்கள் சபாமண்டபத்தில் கூடுவதுடன் ஆரம்பமாகும். சபை அலுவல் ஒழுங்கு பின்வருமாறு :-

**1.**

**பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்தல் மற்றும் கூட்டத்தினைக் கூட்டுதல் பற்றிய மேன்மைதங்கிய சனாதிபதியினது பிரகடனத்தினைப் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் வாசித்தல்.**

**2.**

**மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களின் பேருரை.**

---

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் 2009 மே மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நாளாக இருக்குமாக.

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 மே மாதம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

**5.**

**ஒத்திவைப்பு.**